**வாயில சொல்லாதீங்க வயல்ல காட்டுங்க**



இயற்கையா செயற்கையா இரண்டு ஏக்கர் சவால் என்ற தலைப்பில் கடந்த ஜீலை 10, 2007 தேதியிட்ட இதழில் ஒரு கட்டுரை வெளியிட்ட இதழில் ஒரு கட்டுரை வெளியிட்டு இருந்தோம். அதில், திருநெல்வேலி மாவட்டம், புளியங்குடியைச் சேர்ந்த " முன்னோடி இயற்கை விவசாயி' அந்தோணிசாமி, " ரசாயன விவசாயம்தான் பெரிசுனு வாதாடுறவங்களுக்கு ஒரு சவால் விட றேன். என்னோட நிலத்துல ரெண்டு ஏக்கரை ஒதுக்கி தருவேன். அதுல ரசாயன உரம், பூச்சி மருந்தெல்லாம் போட்டு அவங்க செலவுல பயிர் செய்யட்டும். அதுல விளையறதையே அவரோட குடும்பம் சாப்பிட்டுகிட்டு, மீதியை வித்து வருமானம் பார்க்கட்டும். அதேபோல ரெண்டு ஏக்கர் நிலத்தை ஒதுக்கி நான் இயற்கை விவசாயம் செய்வேன். அதுல விளையறதையே சாப்பிட்டு, மீதியை வித்து வருமானம் பார்ப்பேன்.

ஆரம்பத்திலேயே ரெண்டு நிலத்தோட மண்வளம், ரெண்டு குடும்ப உறுப்பினர்களோட உடல் நிலை எல்லாத்தையும் பரிசோதனை செஞ்சிக்கணும். 5 வருஷ முடிவுல கிடைச்ச லாபம், மண்ணோட தன்மை, குடும்ப உறுப்பினர்களோட உடல் நலம் இதையெல்லாம் பரிசோதிச்சிப்பாப்போம். ரசாயன உரம் போட்டம் நிலத்தோட வளம், இயற்கை உரம் போட்ட நிலத்தைவிட கூடியிருந்தா, லாபம் அதிகமா கொடுத்திருந்தா, குடும்பத்துல உள்ளவங்களுக்கு எந்த நோயும் வராம இருந்தா ஒரு லட்ச ரூபாய் பரிசும், வேளாண் செம்மல் பட்டமும் தரத்தயாரா இருக்கேன்" என்ற கூறியிருந்தார். கிட்டதட்ட மூன்று ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில், நம்மை தன்னுடைய தோட்டத்துக்கு அழைத்த அந்தோணிசாமி, "இந்த சவால் விஷயத்தை பிரதமர், முதலமைச்சர், விவசாய அமைச்சர், விவசாயத் துறை செயலாளர், வேளாண் பல்கலைக்கழகத் துணைவேந்தர்னு பலருக்கும் அனுப்பி இருந்தேன். யாருமே இதுவரைக்கும் அதை ஏத்துக்கல. ஏன்னா வாயால என்ன வேணும்னாலும் பேசிட்டு, எழுந்திரிச்சுப் போயிடலாம். ஆனா, நான் சொல்றது வயல்ல நிரூபிச்சுக் காட்ட வேண்டிய விஷயமாச்சே அதான் யாருக்கும் தைரியமில்லை.

ஆனா, நான் விட்ட அந்த சவால் இன்னிக்கு வரைக்கும் கூட அப்படியேதான் இருக்கு. அதை ஏத்துக்கத் துப்பு இல்லாதவங்க, இப்பவும்கூட இயற்கை விவசாயத்துக்கு எதிரா, ‘நீயா நானா…னு வாய் சவடால் அடிச்சுக்கிட்டு இருக்குதாங்க. புள்ளி விவரங்களை அள்ளி விடுதாங்க. அதை நினைச்சாத்தான் வேதனையா இருக்கு” என்று ஆதங்கம் பொங்கினார். தொடர்ந்து பேசிய அந்தோணிசாமி, “புள்ளவிவரப்புலிங்க, இயற்கை முறையில் விவசாயம் செஞ்சா இவ்வளவு பேருக்கும் உணவு கொடுக்க முடியாதுங்குதாங்க கரும்புல தமிழ்நாட்டோட சராசரி மகசூல் 30 டன்தான். ஆனா, இயற்கையில எட்டாவது கட்டையிலயும் சராசரி மகசூல் 50 டன் எடுத்துக் காட்டியிருக்கோம். சராசரி 2 டன் நெல் உற்பத்தியை அரை டன் அதிகப்படுத்தி இருக்கோம். அதேபோல, புரதம், கார்போ ஹைட்ரேட், சுக்ரோஸ்’ன எல்லா சத்துக்களும் ரசாயன விவசாயத்தைவிட, இயற்கை முறையில அதிகமா இருக்குனு நிரூபிச்சிருக்கோம்.

ஓட்டப்பந்தயத்துல ஊக்கமருந்தை சாப்பிட்டு ஓடுறதுக்கும், ரசாயன விவசாயத்துக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. ஒரு மனுஷன் நல்லா வாழணும்னா… சுத்தமான தண்ணி, சுகாதாரமான உணவு இதையெல்லாம் அரசாங்கம் அவனுக்குக் கொடுக்கணும். ஆனா, இன்னிக்கு ஒவ்வொரு இந்தியனும் சராசரிய 300 பி.பி.எம். நஞ்சு கலந்த உணவைச் சாப்பிடுறதா உலக சுகாதார மையம் சொல்லுது. 45 பி.பி.எம். நஞ்சு உள்ள பொருட்களுக்கே தடை விதிச்சிருக்கு, ஐரோப்பிய நாடுகள். அப்ப அவெிட நாம எவ்வளவு அதிகமா நஞ்சை சாப்பிடுதோம்னு தெரிஞ்சுக்கங்க கிட்டத்தட்ட இந்தியாவே நோயாளிகள் தேசமா இருக்கறதுக்க இதுதான் அடிப்படைக் காரணம். இப்ப சொல்லுங்க எல்லோருக்கும் உணவு கொடுக்குறது முக்கியமா ஆரோக்கியமான உணவு கொடுக்குறது முக்கியமா என்று அழுத்தமானக் கேள்வியை எழுப்பியவர், தொடர்ந்தார்.

“இந்தியாவுல கிட்டத்தட்ட 5 கோடி 60 லட்சம் டன் உப்பை, உரம்கிற பேருல நிலத்துல கொட்டுறோம். ஒரு லட்சத்து 5 ஆயிரம் டன் பூச்சிக்கொல்லியைத் தெளிக்குறோம்’னு ஒரு புள்ளிவிவரம் சொல்லுது. இந்த ஆறு கோடி டன் நஞ்சை, காஷ்மீரில் இருந்து கன்னியாகுமரி வரைக்கும் தெளிக்குறோம். இந்த நஞ்சு தண்ணியில கலக்குறப்ப தவளை, மீன், நீர்க்குருவி மத்த நீர்வாழ் உயிரினங்க அழியுது. தவளை இல்லாததால கொசு பெருகிப்போச்சு. கொசுவை அழிக்கக் கொளுத்துற கொசுவர்த்தி ஆஸ்துமா மாதிரியான நோய்களை உண்டாக்குது. இப்ப தெரியுதா பிரச்னை எங்க ஆரம்பிக்குதுனு. காத்துல 76 நைட்ரஜன் இருக்கு. வேர் முடிச்சுப் பயிர்களை விதைச்சு, அந்த நைட்ரஜனை அறுவடை செய்றோம். அமுதக்கரைசலைத் தெளிச்சு மண்ணை வளமாக்குறோம். பஞ்சகவ்யா தெளிச்சு பயிரை வளர வைக்கிறோம். மூடாக்கு போட்டு ஈரப்பதத்தை பாதுகாக்குறோம். சுருக்கமாக சொன்னா வெளி இடுபொருள்களைப் பயன்படுத்தாம, சுத்துப் புறத்துல கிடைக்குறதை வெச்சே விவசாயம் பண்ணுதோம். இதுனால யாருக்கும் தொந்தரவு இல்லியே அப்படியிருக்கறப்ப எதுக்காக இயற்கை முறை விவசாயத்தை எதிர்க்கணும். எல்லா விவசாயிகளும் இயற்கைக்கு மாறிட்டா ஆறு கோடி டன் ரசாயனத்தக்காக

இந்திய விவசாயிங்க கொட்டிக் கொடுக்கற காசு, கையை விட்டுப் போயிடுமேங்கற பயம்தான். அதனாலதான், இங்க இருக்கற ஆட்களை இயற்கைக்கு எதிரா தூண்டிவிட்டுக்கிட்டு இருக்கறாங்க அந்நிய நாட்டு வியாபாரிங்க. காசுக்காக நாட்டோட வியாபாரிங்க. காசுக்காக நாட்டோட ராணுவ ரகசியங்களையே விக்கிறவங்க.

காசுக்காக நாட்டோட ராணுவ ரகசியங்களையே விக்கிறவங்க நிறைஞ்ச இந்த நாட்டுல, இயற்கைக்கு எதிரா கொடி பிடிக்கறவங்களோட பின்னணி என்னவாயிருக்கும்னு நான் சொல்ல வேண்டியதில்லை" என்று சீறலாகச் சொன்ன அந்தோணிசாமி, "நம்ம அரசாங்கம், இயற்கை விவசாயத்தை ஆதரிச்சா ஆறு கோடி டன் ரசாயனத்துக்கான அன்னிய செலவாணி மிச்சமாகும். ஏற்கெனவே இந்தியா எல்லா வளமும் மிக்க நாடா இருக்கு ஒளி, காத்து, நீர்னு எதுக்கும் குறைச்சலில்லை. இதையெல்லாம் சமச்சீரா பயன்படுத்தினாலே போதும், நாம வல்லரசா உயர முடியும்" என்று உலக விஷயங்களையும் பேசினார்.

நிறைவாகப் பேசியவர், "இஸ்ரேல் நாட்டு விவசாயிங்க என் வயலைப் பார்த்துட்டு, சாகுபடி முறையைத் தெரிஞ்சுகிட்டு போறாங்க. பல நாட்டுல இரந்து விவசாய மாணவர்கள் வந்து, என்கிட்ட கத்துக்கிட்டுப் போறாங்க. இந்திய வேளாண்மைத் துறை டைரக்டர் ஜெனரல் மங்கல் ராய் என் நிலத்துக்கு வந்து பாத்துட்டு, எல்லாம் அருமையா இருக்கு'னு பாராட்டுறாரு. ஆனா, நம்ம அரசாங்கம்தான், இயற்கை விவசாயத்தைக் கண்டுக்க மாட்டேங்குது. இதைப்பத்தி, கலாமே'னு மங்கல் ராய் கிட்டயே கேட்டேன். அவர், சிரிச்சு கிட்டே, அதெல்லாம் பாலிசி மேடட்டர்'னு சொல்லிட்டுப் போயிட்டாரு. ஆக, நம்ம நாட்டு அரசாங்கத்தையே செயல்பட விடாம பன்னாட்டுச் சக்திகள் தடுக்குது. இந்தச் சூழ்நிலையில, 'எனக்கு ஆரோக்கியமான உணவுதான் வேணும்'னு நுகர்வோர்கள் எல்லாரும் சேர்ந்து குரல் கொடுக்கறதுதான், இந்தியா முழுக்க இயற்கை விவசாயம் பரவுறதுக்கு ஒரே வழி" என்றார் வேண்டுகோளாக.

**தொடர்புக்கு**

அந்தோணிசாமி
புளியங்குடி
திருநெல்வேலி மாவட்டம்,
அலைபேசி 94435-82076